(திரு. செ. அரங்கநாயகம்)

தேதியன்று பொதுப் பணித்துறையினரால் பழுதுபார்க்கப்பட்டு தளம் செப்பனிடப்பட்டு வெள்ளையடித்து கொடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. இச்சம்பவத்தை தொடர்ந்து, மழை மற்றும் பலத்த காற்று அடிக்கும் நேரங்களில் கூரைக் கட்டடங்களிலும் மற்றும் பாதுகாப்பற்ற இடங்களிலும் வகுப்புகளை நடத்த வேண்டாம் என அனைத்துப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்குப் பள்ளிக் கல்வி இயக்குநரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

4. ஆகவே இப்பள்ளியில் ஏற்பட்டுள்ள விபத்து இயற்கையின் சீற்றத்தினாலேயேயன்றி வேறு எந்தக் காரணங்களினாலும் அல்ல.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கட்டிடத்தினால் ஒரு முதுநிலை ஆசிரியர் இறந்திருக்கிறார். ஒரு மாணவருக்கு ப்ரேக்சர் ஆகியிருக்கிறது. இந்த கட்டிடம் 1978-ல் கட்டப்பட்டது. அதுமட்டுமல்ல. இந்த விபத்து நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால்தான் பழுது பார்க்கப்பட்டு வெள்ளையடிக்கப்பட்டுள்ளது. தனியாரால் அல்ல. பி.டபிள்யூ.டி. டிபார்ட்மென்ட்டால். ஆகவே பொறுப்பற்ற முறையில் பி.டபிள்யூ.டி. கட்டிடம் கட்டி பழுது பார்த்ததால் கல்வித் துறையிலே மாணவர்கள் படிக்கின்ற பள்ளிகளில் இப்படிப்பட்ட உயிர் சேதங்கள் ஏற்படுகின்றன. சம்பந்தப்பட்ட பி.டபிள்யூ.டி. அதிகாரி மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? அந்த பாதிக்கப்பட்டு இறந்த ஆசிரியர் குடும்பத்திற்கும், பாதிக்கப்பட்ட மாணவர் குடும்பத்திற்குப் அரசு நஷ்ட ஈடு வழங்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு விசாரித்து, இதிலே யார் பொறுப்பானவர்களோ அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க முயற்சிகள் எடுக்கப்படும். அந்த பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான முறையில் ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று அரசு பரிசீலிக்கும்.

(21) தஞ்சை, பந்தநல்லூர் அரசினர் மேல்நிலைப்பள்ளிக் கட்டிடம் இடிந்து விழுந்துள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. இராசாங்கம், டாக்டர் க. நல்லமுத்து, திருவாளர்கள் கி. கிருஷ்ணமூர்த்தி, துரை கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவனஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

கவன ஈர்ப்புகள்

திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தாலூகா, பந்தநல்லூர் அரசினர் மேல் நிலைப்பள்ளி கூரை கட்டிடம் கடந்த 28-4-1986 அன்று இடிந்து விழுந்ததால், 7-வது வகுப்பு தேர்வு எழுதிக்கொண்டிருந்த துரை என்கிற மாணவன் மரணமடைந்ததின் காரணமாக ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

1986ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் நாள் அன்று பிற்பகல் சுமார் 3-45 மணிக்கு திடீரென்று பெய்த பேய் மழையாலும், சுழற்காற்றாலும், தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை கல்வி மாவட்டம், பந்தநல்லூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியின் கூரைவேய்ந்த வகுப்பறைக் கட்டிடத்தின் வடபுறமுள்ள மேற்கூரை திடீரென்று விழுந்துவிட்டது. இக்கட்டிடத்தில் 7ஆம் வகுப்பு ஆண்டுத் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இங்கு 10 மாணவர்கள் தேர்வு எழுதிக் கொண்டிருந்தனர். ஒரு ஆசிரியர் மேற்பார்வை செய்து கொண்டிருந்தார். கட்டிடத்தின் மேற்கூரை விழுந்தவுடனே, கண்ணிமைக்கும் நேரத்திற்குள், ஒரு மாணவனைத் தவிர மற்றவர்கள் வெளியேறிவிட்டனர் ஏ. துரை என்னும் 7-ஆம் வகுப்பு மாணவன் மட்டும் வெளியேற முடியாமல் இடிபாடுகளில் சிக்கி அதே இடத்தில் இறந்துவிட்டார். மற்ற மாணவர்களுக்கு எவ்விதக் காயமும் ஏற்படவில்லை. தேர்வு மேற்பார்வை செய்து கொண்டிருந்த இடைநிலை ஆசிரியர் திரு. வி. செளரிராஜன் என்பவருக்கு சிறிது உள்காயம் ஏற்பட்டு முதலுதவி அளிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பிவைக்கப் பட்டார். இறந்த மாணவனின் உடல் பிரேத பரிசோதனைக்காக அன்றே கும்பகோணம் அரசினர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

2. விபத்து நடந்த கூரைக்கட்டிடம், இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுவதற்கு முன்பு 1976ஆம் ஆண்டில் பொது மக்களால் கட்டிக்கொடுக்கப்பட்ட கூரைக் கட்டிடம் ஆகும்.

3. இச்சம்பவத்தைத் தொடர்ந்து, மழை மற்றும் பலத்த காற்று அடிக்கும் நேரங்களில் கூரைக் கட்டிடங்களிலும் மற்றும் பாதுகாப்பற்ற இடங்களிலும் வகுப்புகளை நடத்தவேண்டாம் என அனைத்துப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், பள்ளிக்கல்வி இயக்குநரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

கவன ஈர்ப்புகள்

[திரு. செ. அரங்கநாயகம்]

4. ஆகவே, இப்பள்ளியில் ஏற்பட்டுள்ள விபத்து இயற்கையின் சீற்றத்தினாலேயேயன்றி வேறு எந்தக் காரணங்களினாலும் அல்ல.

திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பந்தநல்லூர் மேல்நிலைப்பள்ளியில் சுமார் 700 மாணவர்களும், 300க்கு மேற்பட்ட மாணவிகளும் கல்வி பயின்று வருகிறார்கள். அங்கே 21 வகுப்பு அறைகள் தேவைப்படுகின்றன. இருந்தாலும் 9 வகுப்பறைகளே உள்ளன. மீதம் 12 வகுப்பு அறைகளில் படிக்கக்கூடிய மாணவர்கள் மரத்தடியிலே கல்விப் பயின்றுகொண்டிருக்கிறார்கள். இடிந்து விழுந்த கூரைக் கட்டிடம்போல் மற்றொரு கூரைக் கட்டிடம் பழுதடைந்த நிலையில் இருக்கிறது.

அந்தப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா? இறந்துவிட்ட ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்த துரை என்ற அந்த மாணவனின் குடும்பத்திற்கு நிதியுதவி வழங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினர் கருத்தை அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(22) சென்னை பல்கலைக் கழக பி.ஏ. இறுதித் தேர்வுக்கான ஆங்கில வினாத்தாளில் பாடதிட்டத்திற்குப் புறம்பாக வினாக்கள் உள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், கு. சுப்பராயன், ஜே. ஹேமச்சந்திரன், ஜே. முகம்மது கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை, க்வீன் மேரீஸ் கல்லூரியில் பி.ஏ., இங்கிலீஷ் லிட்டரேச்சர் படிக்கும் மாணவிகள் இந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் எழுதிய இறுதி ஆண்டுத் தேர்வில் தரப்பட்ட பெரும்பாலான வினாக்கள் தங்கள் சிலபசுக்கு சம்பந்தமில்லாமல் வந்ததால் அத்தேர்வில் தேர்ச்சி பெறுவோமா என்ற அச்சமும் வேதனையும் அம்மாணவிகள் மத்தியிலும் மற்றும் அவர்தம் பெற்றோர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.